**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், செய்யூர்**

**அசல் வழக்கு எண்.49/2020**

**(DW1)**

| | | |
|---|---|---|
| **பெயர்.திரு.ராதாகிருஷ்ணன்** | த/பெ.திரு.வீரராகவ நாயுடு | நாள் 07.11.2024 |

**பி.வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

பி.வா.சா.ஆ. 5 முதல் பி.வா.சா.ஆ.11 வரையிலான ஆவணங்கள் தாவா சொத்தின் பத்திரங்களா என்றால் ஆமாம். தாவா சொத்தின் சர்வே எண்.128/5. தாவா சொத்தின் பழைய பைமாஷ் நெம்பர்.71/3 என்றால் அது பத்திரத்தில் உள்ளது, பத்திரத்தை பார்த்தால் தான் சொல்ல முடியும். பழைய பைமாஷ் எண்.71/3 என்றால் தவறு. தாவா சொத்தின் சரியான பைமாஷ் எண் என்ன என்றால் 74/1எ. நான் தாக்கல் செய்த 5 பத்திரங்களில் எந்த பத்திரத்தில் தாவா சர்வே எண் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் சரியான பைமாஷ் எண் எனக்கு தெரியுமா தெரியாதா என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. யோசித்து தான் சொல்லமுடியும்.

2. சர்வே எண்.128/5 க்கு எத்தனை பைமாஷ் என்றால் எனக்கு தெரியாது. பி.சா.ஆ.5 முதல் பி.வா.சா.ஆ.11 வரையிலான ஆவணங்கள் தான் எனது சொத்துக்கான தாய் பத்திரங்கள் என்றாலும் அதன் முன்னிலைக்கு தான் நான் தாவா சொத்தில் உரிமை கோருகிறேன் என்றாலும் சரிதான். பி.வா.சா.ஆ.5 முதல் பி.வா.சா.ஆ.11 வரையிலான ஆவணங்களை தவிர்த்து தாவா சொத்திற்கு வேறு எதாவது பத்திரங்கள் உள்ளதா என்றால் உள்ளது. எவ்வளவு விஸ்தீரணத்திற்கு என்றால் 2 ஏக்கர் 36 செண்ட். அந்த பத்திரத்தினை நான் ஏன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் வாதி தான் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் அவர்கள் தாவா சொத்திற்கான ஆவணங்களை தாக்கல் செய்யாதவரை அந்த பத்திரத்தினை நான் தாக்கல் செய்ய வேண்டியதில்லை என்று எனது வழக்கறிஞர் கூறினார்.

3. பி.வா.சா.ஆ.5 முதல் பி.வா.சா.ஆ.10 வரையிலான ஆவணங்களில் சர்வே எண்கள் காண்பிக்கப்பட்டுள்ளது என்றாலும் பைமாஷ் எண்கள் காண்பிக்கப்படவில்லை என்றாலும் அதில் தாவா சர்வே எண் குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ.11 ல் சர்வே எண்.128/1 வீரராகவலு மற்றும் 5 நபர்களுக்கு உரிமையானது என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும்

சர்வே எண்.128/5 குறித்து குறிப்பிடவில்லை என்றாலும் சர்வேஎண்.128/1 நீர்பிடிப்பு நிலம். சர்வே எண்.128/1 தான் சர்வே எண்.128/5 ஆக மாறியுள்ளதா என்றால் ஆமாம். அதுபோல் பி.வா.சா.ஆ.11ல் காண்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

4. சர்வே எண்.128/1 தான் சர்வே எண்.128/5 ஆக மாறியுள்ளதாக காண்பிப்பதற்கு வருவாய் ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனவே பி.வா.சா.ஆ.5 முதல் பி.வா.சா.ஆ 11 வரையிலான ஆவணங்கள் தாவா சொத்திற்கு சம்மந்தம் இல்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. பழைய பைமாஷ் எண்.71/3 தாவா சர்வே எண்ணுக்கு உரியது அல்ல என்றால் சரியல்ல. மூல ஆவணங்களான பி.வா.சா.ஆ.5 முதல் பி.வா.சா.ஆ.11 வரையிலான ஆவணங்களில் தாவா சர்வே எண் குறிப்பிடாத போது பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தின் படி நான் தாவா சொத்தில் உரிமை கோரமுடியாது என்றாலும் நான் இந்த வழக்கில் தவறாக எதிர்வியாஜ்ஜியம் செய்கிறேன் என்றாலும் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது

மறுவிசாரணை, இல்லை.

Taken down by me in open read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-Tmt.V.Devapriya,
DM Cum JM
Cheyyur. (FAC)